நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திருமதி.மு.அருணா, இ.ஆ.ப.,

ந.க.அ3.எண்.800/2023 நாள்: 21.12.2023.

பொருள் : வன்கொடுமை தடுப்புச் சட்டம் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – நீலகிரி மாவட்டம் – கூடலூர் வட்டம் – தேவாலா கிராமம் – கீழ்நாடுகாணி - செல்வி.ரம்யா, த/பெ.திரு.சுந்தரலிங்கம் என்பவர் 21.09.2017 அன்று வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டது – அவரது சகோதரி செல்வி.யுவரஞ்சனி என்பவருக்கு வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் திருத்திய விதிகள் 2016-இன்படி கருணை அடிப்படையில் வருவாய்த் துறையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் வழங்கி - உத்தரவு

படிக்கப் பட்டவை :

1. தமிழ்நாடு மாநில அரசிதழ் எண்.281, நாள் : 01.09.2017.
2. இயக்குநர் ஆதிதிராவிடர் நல இயக்குநரகம், சென்னை ந.எண்.எ4/3489/2022, நாள் :16.03.2023
3. அரசு கடிதம் எண்.5327341/PA2/2023-1, நாள்:19.09.2023.
4. உதவி இயக்குநர், அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம், நீலகரி மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.000920/அ4/2023, நாள் :12.12.2023.
5. திருமதி.பிரமிளா, க/பெ.சுந்தரலிங்கம், 7/368, கீழ்நாடுகாணி, தேவாலா கிராமம், கூடலூர் வட்டம் என்பவரின் வாக்குமூலம் நாள் :12.12.2023.
6. திரு.சுந்தரலிங்கம், த/பெ.முனியாண்டி, 7/368, கீழ்நாடுகாணி, தேவாலா கிராமம், கூடலூர் வட்டம் என்பவரின் வாக்குமூலம் நாள் :12.12.2023.
7. செல்வி.சு.யுவரஞ்சனி, த/பெ.முனியாண்டி, 7/368, கீழ்நாடுகாணி, தேவாலா கிராமம், கூடலூர் வட்டம் என்பவரின் வாக்குமூலம் நாள் :12.12.2023.

------

ஆணை:

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், தேவாலா கிராமம், கீழ்நாடுகாணி என்ற முகவரியில் வசித்து வந்த செல்வி.ரம்யா, த/பெ.திரு.சுந்தரலிங்கம் என்பவர் கடந்த 21.09.2017 அன்று வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட குடும்பத்தில் உள்ள செல்வி.ரம்யா (லேட்) என்பவரின் இளைய சகோதரி செல்வி.யுவரஞ்சனி, த/பெ.திரு.சுந்தரலிங்கம் என்பவருக்கு பார்வை 1 முதல் 3 வரையிலான அரசாணை மற்றும் கடிதத்தில் தெரிவித்துள்ள தெளிவுரைகளின்படியும், செல்வி.யுவரஞ்சனி என்பவரின் கல்வி சான்றிதழ்களின் அடிப்படையிலும், வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் திருத்திய விதிகள் 2016-இன்படியும், கருணை அடிப்படையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு கீழ்க்கண்டவாறு இளநிலை வருவாய் ஆய்வாளர் பணிநியமனம் வழங்கி உத்தரவிடப்படுகின்றது.

| வ.எண் | பெயர் (ம) முகவரி | கருணை அடிப்படையில் வழங்கப்படும் பணி மற்றும் அலுவலகம் |
|---|---|---|
| 1) | செல்வி.யுவரஞ்சனி,<br>த/பெ.திரு.சுந்தரலிங்கம்,<br>எண்.7/368,<br>நாடுகாணி கிராமம்,<br>கூடலூர் வட்டம், நீலகிரி மாவட்டம் | இளநிலை வருவாய் ஆய்வாளர்<br>மாவட்ட ஆதிதிராவிடர் (ம)<br>பழங்குடியினர் நல அலுவலகம்<br>உதகமண்டலம்<br>(காலிப்பணியிடத்தில்) |

**நிபந்தனைகள்:-**

1. மேற்கண்ட பணியிடம் முற்றிலும் தற்காலிகமானது.
2. தனியர் பணியில் இணையும்பொழுது உடற்தகுதி சான்று மற்றும் வேலைவாய்ப்பு அடையாள அட்டையினை சம்பந்தப்பட்ட அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்.

3. தனியருக்கு பணிநியமனம் செய்யப்பட்ட பணியிடத்தில் உடனடியாக பணியில் இணைதல் வேண்டும். இதில் எவ்வித முறையீடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஓம்/- மு.அருணா,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
நீலகிரி மாவட்டம்.

பெறுநர்
செல்வி.யுவரஞ்சனி,
த/பெ.திரு.சுந்தரலிங்கம்,
எண்.7/368,
நாடுகாணி கிராமம்,
கூடலூர் வட்டம், நீலகிரி மாவட்டம்

நகல்:

1. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், வருவாய் நிருவாகம் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை
2. அரசு செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தலைமைச் செயலகம், சென்னை – 5.
3. இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சேப்பாக்கம், சென்னை – 5.
4. இயக்குநர், தேசிய தாழ்த்தப்பட்டோர் நல ஆணையம், சாஸ்திரிபவன், சென்னை – 06.
5. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியர் (பொது), உதகமண்டலம்.
6. காவல் கண்காணிப்பாளர், நீலகிரி மாவட்டம்
7. மாவட்ட ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலர், உதகமண்டலம்.

// உ.ந.உ.ப //

21/12/2023

மாவட்ட ஆட்சியருக்காக 7/8

21/12/23